MADRAS

உ

சிவமயம்.

ஸ்ரீவன்னிவம்ஸப்ரகாசிகை.

இஃது

சேலம் வன்னிகுல க்ஷத்திரிய

ஸ்ரீ கழறிற்றறிவார் சபையின்

பொக்கிஷ காரியதரிசியும்,

சேலம் சுதேசாபிமானி பிரஸ்

மானேஜருமாகிய

சு. அர்த்தநாரீச நாயகவர்ம்மாவால்

இயற்றப்பட்டு

மேற்படி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதிகிருது௵ தநுர்௴.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.] [விலை அணா 2.

உ

சிவமயம்.

முகவுரை.

இச்சிறுநூல் வருண விஷயமே இன்னதென்றறியாத வன்னி வமிச க்ஷத்ரியர் குலத்துதித்த சிறுவர்களின் பொருட்டு வினு விடையாக எழுதப்பட்டது இதில் வன்னிவம்ஸ க்ஷத்ரியர் களது வரலாறும் மேன்மையும் தெளிவாகக் காட்டப்பட்டிருக் கின்றன. முன்னூற்களாகிய ஜாதிசங்கிரஹசாரம், வருணதர்ப் பணம் என்னும் இரண்டு கிரந்தங்களும் வேண்டிய அளவு இக் குலத்தின் பிரபாவத்தைச் சொல்லியிருக்க தற்போது இந்நூல் வெளிவருவதால் என்னபயன் என்று சிலர் நினைக்கக்கூடும். மிகவும் விரிந்து பெரிதாயுள்ள அந்த கிரந்தங்களைப் படிக்க ஏற் படும் சிரமத்தைக்காட்டிலும் இச்சிறுநூலைப் படிப்பது மிகவும் சுலபமாகும் என்பதே எனது கருத்து. எப்படியாவது வன்னி குல க்ஷத்ரிய சிறுவர்கட்கு ஜாதி போதகம் ஏற்படவேண்டியது நமது மரபிற்கு முக்கிய கடமை.

☞ சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மஹாசங்கத்தார் இந் நூலை நமது மரபினரால் ஏற்பட்ட பாடசாலைகளில் ஓர் பாட மாகவைத்து நமது மரபு சிறுவர்கட்கு நல்லறிவு கொளுத்த வேண்டுமாய் மிகவும் வேண்டுகின்றனன்.

இதைத்தவிர, க்ஷத்ரிய விளக்கம் அல்லது "ஸ்ரீ வன்னி குலோத்கர்ஷ தீபிகை" என்னும் நாமத்துடன் சுலபமானவெண் ...து தமிழில் ஓர் புத்தகமும் இதனுடன் தற்போது என்னால்

வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் நமது குலத்தைப்பற்றி பலபேர்க்குண்டாகும் ஆசங்கைகளும் அவற்றின் சமாதானமும் செவ்வனே எழுதப்பட்டுள. அதனையும் உயர்வகுப்புகளிற் படிக்கும் பள்ளிச் சிறுவர்கட்குக் கொடுத்தல் மிக நலமாகும்.

இவ்விரு நூற்களையும் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டிய சகாயம் புரிந்தவர்களாகிய சேலம் கந்தம்பட்டி ராமசாமி நாயகரவர்கட்கும் சாவேரி நாயகரவர்கட்கும் எனது நன்றியுடைமை மறக்கற்பாலதன்று.

சு. அ.

௳

ஸ்ரீ கணேசாயநம:

க்ஷத்ரிய தீபமென்னும்

ஸ்ரீ வன்னிவம்ஸப்ரகாசிகை.

விநாயகஸ்துதி.

மாமேவு முச்சுடருள் வன்னி மரபுதித்த
தூமேவு வேந்தர்குலத் தொல்புகழைத் - தேமேவு
செந்தமிழிற் கத்தியமாய்ச் செப்பக் கருணைமதத்
தந்திமுகச் சாமி சரண்.

வினா:—"ஸ்ரீவன்னிவம்ஸ பிரகாசிகை" என்னும் பதங்களுக்குப் பொருள் யாது?

விடை:—ஸ்ரீ=சிறப்புற்ற, வன்னி=அக்கினிபகவானது, வம்சம்=மரபாராகிய க்ஷத்ரியரது குலத்தை, பிரகாசிகை=விளக்கும் நூல்—எனவே வன்னியரது மரபைவிளக்கும் நூல் என்பது தேர்ந்த பொருள்.

வினா:—வன்னியர் என்னும் சொல்லுக்கு இலக்கணம் என்ன?

விடை:—வஹ்நி+ஜர்=அக்கினியில் உதித்தோர் எனப் பொருள்படும் இரண்டு வடமொழிப் பதங்களும் தமிழில் வன்னியர் என மருவி ஓர் மரபைச் சுட்டும் பெயராம்.

வினா:—வன்னியர் என்னும் ஓர் ஜாதி சிருஷ்டிகாலத்தில் ஏற்பட்டதா? அல்லது இடையிலுண்டாயிற்றா?

விடை:—வன்னியர் என்னும் ஓர் ஜாதி எப்போதும் இல்லை. ஆனால் ஓர்ஜாதியின் உட்பிரிவாகும்.

வினா:—எந்த வர்ணத்தின் உட்பிரிவாம்?

விடை:—ஆதி நால்வருணங்களில் இரண்டாவதாய் விளங்கும் க்ஷத்ரிய வருணத்தின் உட்பிரிவாம்.

வினா:—முதலில் வர்ணங்கள் எத்தனையென்பதை விளக்குக?

விடை:—பிரம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரர்—அதாவது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்காகும்.

வினா:—இந்த நான்கு வர்ணங்களும் எக்காலத்தில், எதற்காக, யாரால் ஏற்பட்டன?

விடை:—உலக சிருஷ்டியுண்டாகும் காலத்தில் உலகத்தை நிலை நிறுத்தும் பொருட்டு பிர்மா முதலிய பிரஜாபதிகளால் ஏற்பட்டன?

வினா:—உலகை நிலை நிறுத்துவதற்கும் இந்த நான்கு வர்ணங்கட்கும் சம்பந்தமெப்படி?

விடை :—பிராமணன் வேதமோதி, யாகங்களைச்செய்து, தேவர்களைச் சந்தோஷமாக்கி மழையையும் அதனுல் உணவுப் பொருள்களையும் அதனுல் உயிர்களையும் உண்டாக்கக் காரணமாகிருன்; க்ஷத்ரியன், உலகிலுள்ள ஜீவர்களை ஓர் கட்டுக்குட்படுத்தி வேத வரம்பை மீருதபடி தனது புஜ பலத்தால் அவர்களை ஆளுகிருன்; வைசியன் உலகிலுள்ள ஜீவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பயிரிடுவதாலும், அதற்காகப் பசு வளர்ப்பதாலும், விளைந்த பண்டங்களைக் காசுக்கு மாற்றுவதாலும் உலகிற்கு உபகாரமாகிருன்; சூத்திரன், ஷை மூன்று வர்ணத்தாருக்கும் ஏவலாளனுய் ஷை காரியங்களைச் செய்துமுடிக்கப் பயன்படுகிருன்; இவ்வாறு நான்கு ஜாதியார்களும் உலகிற்குக் கட்டாயமாய் வேண்டியவராகின்றனர்.

வினு :—மேற்சொன்ன நான்கு ஜாதிகளையன்றி உலகில் காணப்படும் வேறு ஜாதிகள் ஈஸ்வர சிருஷ்டியல்லவோ ?

விடை :—அல்ல, ஜீவசிருஷ்டியாம்.

வினு :—ஜீவ சிருஷ்டி என்ருல் என்ன ?

விடை :—ஜீவர்களே உண்டாக்கிக்கொள்வதாம்.

வினு :—ஜீவர்கள் எவ்வாறு உண்டாக்குகின்றனர்?

விடை :—ஈஸ்வரன் ஜீவர்களது ஜென்மாந்தர குணங்களையும், கர்மங்களையும் வேறு பிரித்து நான்கு ஜாதிகளை ஸ்திரீ புருஷர்களுடன் ஜதை ஜதையாய் சிருஷ்டித்து அவர்களுக்குவேண்டிய தொழில்களையும் இன்னதென்று கற்பித்து அவற்றின்படி நடக்கவும், முறை பிறழ்ந்து ஷ நான்கு ஜாதிகளும் ஒன்றோடு மற்றொன்று கலவாதிருக்கவும் வரையறுத்திருக்க, அக்கட்டளையை மீறி ஷ நான்கு ஜாதியிலுதித்த ஆடவர்களும் ஸ்திரீகளும் மாறிமாறிக் கலந்ததால் வர்ண சங்கரம் அதாவது ஜாதிக்கலப்பு உண்டாயிற்று. அதனால் வேறு பற்பலஜாதிகள் உண்டாயின.

வினு :—ஆதி நான்கு வருணங்கள் மட்டும் ஈஸ்வர சிருஷ்டி யென்பதற்கு ஆதாரமுண்டோ?

விடை :—"சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் குணகர்ம விபாகஸ:" "செயலாலுங் குணத்தாலுஞ் செல நாலுகுலமாக இயலான்முன் படைத்தேனன்" என்னும் கீதாவாக்கியமே பிரமாணமாம்.

வினு :—வர்ண சங்கரத்தால் விளைந்த விளைவு என்ன?

விடை :—அநுலோம, பிரதிலோம, சங்கர ஜாதியார்கள் உதித்தார்கள்.

வினா:—அநுலோமர் எப்படி உதித்தனர்?

விடை:—உயர்குல ஆண்களும் தாழ்ந்தகுலப் பெண்களும் கூடியதால் உதித்தனர்.

வினா:—பிரதிலோமர் எப்படிப் பிறந்தனர்?

விடை:—தாழ்குல ஆண்களும் உயர்குலப் பெண்களும் கூடியதால். இவ்வண்ணமே அநுலோம பிரதிலோமர்களும் முறை பிறழ்ந்ததால் சங்கரஜாதியாருதித்தனர்.

வினா:—இந்தக்கலப்பு ஜாதிகட்கு ஓர்கணக்கு உண்டோ?

விடை:—அநுலோம பேதம் நாற்பதும், பிரதிலோம பேதம் ஆறும், சங்கர பேதம் பதினான்கும் கூடி ஜாதி அறுபது என்பார்கள்.

வினா:—மேற்படி அறுபது ஜாதியார்களையும் விவரமாய்ச் சொல்லுக.

விடை:—அநுலோமஜாதிகள் நாற்பதுக்கு விவரம்:—

பைஸ்திரீகன்	பிராமண அநுலோமர்கள்.
காயகன் (அரையன்)	
அஜஙிஷ்டயன்	
சாங்கிகன்	
சிவத்துவிஜன் (குருக்கள்) ...	
குண்டகன்	

ஆமாத்யன் ... ... பிஷஜன் ... ... சிகித்ஸகன் ... ... விரதன் (ஆராத்யன்) ... ... மஹாமாத்ரன் (மாவுத்தன்) ... வைகாநஸன் (நம்பி) ... ... கணக்கன் ... ... தெய்வக்ஞன் (சோதிடன்) ...	பிராமண க்ஷத்ரிய அநுலோமர்.
அம்பட்டன் ... ... உபகாரிகன் ... ... நாவிதன் ... ... காயகன் ... ... குயவன் ... ... சைலூஷன்	பிராமண வைசிய அநுலோமர்.
பாரசவன் (கூத்தாடி)... ... தம்பணகன் (ஓச்சன்)... ...	பிராமண சூத்திர அநுலோமர்
க்ஷத்ரபந்து	க்ஷத்ரிய அநுலோமன்.
சமநஸ்வநன் ... ... நாதி ... ... தரணகன் (முத்திரியன்) ... கௌசிகன்	க்ஷத்ரிய வைசிய அநுலோமர்.
உக்ரன் ... ... சாரிகன் ... ... நிஷாதன் (வேடன்) ... ... சூலிகன் (ஷை)	க்ஷத்ரிய சூத்திர அநுலோமர்.
வளையற்காரன்	வைசிய அநுலோமன்.

சூத்திரன் ... ... இலைவாணியன் ... ... பாம்பாட்டி	வைசிய சூத்ர அநுலோமர்.
அஜ வைத்யன் ... ... வைகனிகன் (ஒட்டன்) ... ஆர்யகன் (நட்டுவன்)	சூத்ர அநுலோமர்.

பிரதிலோமர் ஆறு :—

வந்தி (பட்ராஜ்) ... பிராமண க்ஷத்ரிய பிரதிலோமன்.
மாகதன் (நோக்கன்) பிராமண வைசிய பிரதிலோமன்.
சண்டாளன் ... ... பிராமண சூத்திர பிரதிலோமன்.
சாலிகன் ... ... க்ஷத்ரிய வைசிய பிரதிலோமன்.
குயவன் ... ... க்ஷத்ரிய சூத்திர பிரதிலோமன்.
கோபாலன் (இடையன்) வைசிய சூத்திர பிரதிலோமன்.

சங்கரஜாதி பதினன்கு :—

1. கம்மாளன் (ஐந்துபேதம்).
2. அஸ்வபாலகன்.
3. ரஜகன் (உயர்ந்த வண்ணன்).
4. வர்ணகரன் (தாழ்ந்தவண்ணன்).
5. தனி (வள்ளுவன்).
6. சக்ரிகன் (செக்கான்).
7. பாரகன் (குறவன்).
8. மாலாகாரன் (சாத்தானி, பண்டாரம்).
9. சஸ்ய சேஸகன் (செம்படவன்).

10. சர்மகாரன் (சக்கிலி).
11. படவன் (பரவன்).
12. கோரு, குளிகன் ருண்டிகன் ... } பெருமாள் மாட்டுக்காரன் அல்லது குரங்காட்டி.
13. சல்யகன்.
14. மேதுரன்—ஆக அறுபதாம்.

வினா:—கலப்பு ஜாதிகள் உண்டானபிறகு அவர்களுக்கு ஏற்பட்ட உரிமை என்ன?

விடை:—முதல்நான்கு வருணத்தார்களும் அநுலோமர்களும் பட்டணங்களில் வசிக்கவும், பிரதிலோமர்கள் கிராமங்களில் வசிக்கவும், சங்கரஜாதிகள் கிராமப்புறம்பில் வசிக்கவும் ஏற்பாடாயிற்று,

வினா:—வர்ணசங்கரம் ஏற்படாவிட்டால் முதல் நான்கு சுய ஜாதிகளைத்தவிர மற்றஜாதிகளே இல்லாதிருக்குமே? அதனால் குற்றமில்லையா?

விடை:—என்ன குற்றம்! ஆதியில் கிருதயுகத்தில் சாத்விக குணத்தால் எல்லோரும் பிராமணராகவே யிருந்தார்கள். வேறுஜாதி கிடையாது. பிறகு ஜீவர்களிடம் சத்வகுணம் குறைய ஆரம்பித்ததால் நான்கு ஜாதியாக்கப்பட்டார்கள். அதன்பிறகு ரஜோகுண தமோகுண விசேஷத்தால் பலஜாதியானார்கள். ஆதலால் இவைகளெல்லாம் ஜீவசிருஷ்டி என்பதில் தடையே கிடையாது.

வினா :—இந்தப் பிரிவுகளெல்லாம் ஏற்பட்டதால் முடிந்த பலனென்ன ?

விடை :—மோட்சமென்பது மிகவும் தூரமாயிற்று.

வினா :—ஜாதியைப்பற்றிய தருமங்கட்கும் மோட்சத்துக்கும் எப்படி சம்பந்தம் ?

விடை :—ஜாதி தருமங்களை ஈஸ்வரப் பிரீதியாக பலனை விரும்பாமல் செய்துவந்தால் அதனால் கிரமமாக மோட்ச சித்தியாம்.

வினா :—நான்கு வருணங்களுக்கும் ஏற்பட்ட தருமமெவை ?

விடை :—அந்தணர்க்கு :—ஓதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், யாகஞ்செய்வித்தல், ஈதல், ஏற்றல்.

அரசர்க்கு :—ஓதல், யாகஞ்செய்தல், ஈதல், உலகாளுதல், யுத்தம் பயிலுதல், சேவகஞ்செய்தல்.

வணிகர்க்கு :—ஓதல், யாகஞ்செய்தல், ஈதல், பசுக்காத்தல், உழுதல், பண்டமாற்றல்.

வேளாளர்க்கு :—சுத்தமுடைமை, தொண்டு புரிதல், சத்தியமுடைமை, சினமின்மை, வேதவிதியின்றிய மந்திரமுடைமை, அவ்வித நமஸ்காரமுடைமையாம்.

வினா :—இக்காலத்தில் க்ஷத்ரியரும் வைசியரும் இல்லை யெனச் சிலர் சொல்லுகிறதற்குக் காரணமென்ன?

விடை :—சரித்திர, சாஸ்திர ஆராய்ச்சி யில்லாமையே காரணமாம்?

வினா :—பரசுராமரால் க்ஷத்திரியர் நிர்மூலமாக்கப்படவில்லையோ?

விடை :—முற்றிலுமில்லை. கார்த்த வீரியார்ஜுனன் வமிசத்தாரில் சிலரைமட்டும் பரசுராமர் கொலை செய்தாரேயன்றி மற்றவர்களை அல்ல.

வினா :—இதற்கு ஆதாரமுண்டோ?

விடை :—உண்டு. பரசுராமர் ஸ்ரீராகவ மூர்த்தியாலும் அதன்பின் பீஷ்மராலும் அவமானிக்கப்பட்டதும், துவாபரயுகத்தின் முடிவில் நடந்த பாரதயுத்தத்தில் அநேக க்ஷத்ரிய வீரர்கள் ஒருங்கே சேர்ந்ததாக ஏற்படுவதும் அரசர்குலம் பரசுராமரால் முற்றிலும் அழிக்கப்படவில்லை யென்பதற்குத் தக்க ஆதாரமாம்.

வினா :—ஆனால், க்ஷத்ரியருள் எத்தனை பிரிவுண்டு?

விடை :—ஒவ்வொருவரும் உற்பத்தியாவதற்கு ஆதாரமாகிய மூல புருஷனை முன்னிட்டு சூரியகுலம், சந்திரகுலம், அக்கினிகுலமென மூன்று பிரிவுகளுண்டு.

வினு :—மேற்படி மூன்றுக்குமேல் வேறு பிரிவுகளும் உண்டோ?

விடை :—திக்குப்பாலகர் அம்சமாகவும் க்ஷத்ரியர் உற்பத்தியாயிருக்கிறார்கள். பரதகண்டத்திற் பிறந்த அரசர்கள் யாவரும் ஷெமூவகுப்புள் அடங்கியவர்களே.

வினு :—வன்னியர்கள் அக்கினியிற் பிறந்தவர்கள் என்பதனுலேயே அவர்களை க்ஷத்ரியரென நம்பமுடியுமா?

விடை :—சுருதி, யுக்தி, அநுபவம் என்னும் இம்மூன்று பிரமாணங்களைத் தவிர மற்றென்றால் ஒரு பொருளை நிர்ணயிக்கமுடியாது. வன்னியர்கள் க்ஷத்ரியர்களே என்பதற்கு ஷெ மூன்று பிரமாணங்களும் மலிந்துகிடக்கின்றன.

வினு :—சுருதிப் பிரமாணம் என்ன?

விடை :—பதினெண் புராணங்களுள் ஆக்நேயம், பாகவதம், பிரமாண்ட முதலியனவும்; இதிகாசங்களாகிய ராமாயணம், ஹரிவம்ஸம், பாரதம் முதலியனவும்; ஆழ்வார், நாயன்மார் முதலியவர்கள் வசனமும், காவியங்களாகிய சிலையெழுபது, திருக்கைவளம் முதலியனவும்; அந்தந்த அரசர்கள் காலங்களில் ஏற்பட்டு தற்போது கவர்ன்மெண்டாரால் அச்சிடப்பட்டிருக்கும் தாம்பிர, சிலா சாஸனங்களும் இன்னும்பிறவும் போதிய பிரமாணங்களாம்.

வினா :—யுக்திப் பிரமாணம் எப்படி?

விடை :—வன்னியர்கட்குப் பரம்பரையாய் ஏற்பட்டு வழங்கிவரும் பட்டப் பெயர்களுக்கு அர்த்தம் செய்த போதும், அவர்களுக்கு தேவாலயங்கள் முதலிய விடங்களில் நடக்கும் ராஜ மரியாதைகளாலும் இன்னும் பிறவற்றாலும் இவர்கள் க்ஷத்திரியர்களே என்பது யுக்தியாம்.

வினா :—அநுபவப் பிரமாணம் யாது?

விடை :—பூர்வம் தொடங்கி நாளதுவரையில் இந்த மரபார்கள் அரசாட்சி செய்வதே அநுபவமாம்.

வினா :—தற்போது வன்னியரில் யார் அரசாட்சி செய்கிறார்கள்?

விடை :—மலையாளத்தரசர்களும் மற்றுஞ்சிலருமாம்.

வினா :—இன்னும் யார் அரசாட்சி பெற்றவர்கள்?

விடை :—அரசாட்சி இல்லாவிடினும் அநேகர் சிற்றரசர்களாகவும், பாளையக்காரர்களாகவும், ஜமீன்தார்களாகவும் இருக்கின்றனர்.

வினா :—அவர்கள் யார்?

விடை :—(1) அரியலூர் ஜமீன்தாரவர்கள் திருவானைக்காவையாண்ட கோச்செங்கட் சோழராஜ வமிசத்தைச் சேர்ந்தவர்.

(2) உடையார்பாளையம் சிற்றரசரவர்கள் காஞ்சீபுரமாண்ட பல்லவராஜ சந்ததியாவார்.

(3) சிதம்பரத்திலுள்ள பித்தபுரம் ஜமீன்தார் அவர்கள் ஆதியில் சிதம்பரத்தைப் பொன்னம்பலமாக்கிய இரணிய வர்ம சோழன் சந்ததி. இவருக்கு இரண்டுவருடங்கட்கு முந்திதான் சிதம்பரத்தில் ஸ்ரீமந் நடராஜர் சந்நிதானத்தில் பஞ்சாக்ஷரப்படியில் தில்லைவாழ்ந்தணர்களால் ஹிரண்ய வர்ம்மன் சந்ததியென்று பட்டாபிஷேகம் செய்யப்பட்டு ஹிரண்ய வர்ம்மனுடைய கிரீடமும் சூட்டப்பட்டது.

(4) சிவகிரி ஏழாயிரம் பண்ணை ஜமீன்தாரவர்கள் பாண்டியராஜ வமிசத்தில் தற்போதுள்ள சந்ததி.

(5) திருநெல்வேலி பன்னீராயிரம் பண்ணை ஜமீன்தாரவர்களும் சோழராஜ வமிசத்தவராகும்.

(6) மலையாளத்தரசர்கள் சேர ராஜர்களாம்.

(7) தெலுங்குநாட்டில் விஜயநகர வேந்தர் முதலாயினோர் சளுக்கிய வமிசத்தினர்.

வினு :—அக்கிகுலத்தரசர்கள் என்னப்படும் சேர ராஜர்களை மட்டும் வன்னியரென்று சொல்லலாம். சோழ, பாண்டிய, பல்லவ, சளுக்கியர் முதலாயினோரையும் வன்னியரென்று சொல்ல ஆதார மென்னை?

விடை :—சோழர்கள் சூரிய குலமென்றும், பாண்டியர்கள் சந்திர குலமென்றும், சேரர்கள் அக்கினி குலமென்றும் தமிழ்நாட்டுக் கவிகள் சிறப்பித்துப் பேசியிருந்தாலும் உண்மையில் மேற்சொல்லிய அனைவரும் வன்னியர்களேயாம். இதற்குப் பல காரணங்களுண்டு அவற்றுள் :—

(1) சேர, சோழ, பாண்டிய, பல்லவ, சளுக்கிய சந்ததியார்கள் முற்போதும் தற்போதும் ஒருவர்க்கொருவர் கொள்ளக் கொடுக்க வழக்கத்திலிருத்தல்.

(2) இவர்கள் யாவரும் தற்போது வன்னியரென்றே அழைக்கப்படுதல்.

(3) இவர்களின் மூலபுருஷன் அக்கினி பகவான் என்ன புராணங்களில் ஆதாரமிருத்தல்.

(4) "வன்னியர்" என்னும் பதம் சிறப்பாய் அக்கினிகுலச் சேர ராஜர்களைச் சுட்டினும், பொதுவாய் சூரியகுலச் சோழனுக்கும், சந்திர குல பாண்டியனுக்கும் 'வன்னியன்' என்னும் பிரயோகம் காவியங்களில் இருத்தல்.

(5) "வன்னியர்" என்னும் பதம் பொதுவாய் அரசர் என்னும் அர்த்தம் தரும்படி கவிகள் பாடியிருத்தல்.

இவை முதலிய காரணங்களால் மேற்கூறிய யாவரும் வன்னியர்களேயாம்.

வினு:—இவ்வைந்து வமிசத்தார்கட்கும் அக்கினியே மூல புருஷன் என்பதற்குப் பிரமாணம் யாது?

விடை:—ஹரிவம்சம்:-யயாதியின் புத்திரனுகிய துர்வசுவின் பரம்பரையில் வந்த வன்னி என்னும் அரசன் வழியிலுதித்த ஆக்ரீடன் என்பவனுக்குக் கேரளன், சோழன், பாண்டியன், கலிங்கன் என்னும் புத்திரர்கள் பிறந்தாரென்றும் அவர்களது ராஜ்ஜியங்கள் அவர்கள் பேராலேயே வழங்கப்பட்டதென்றும் உரைப்பதற்கிணங்க மிஸ்டர் டாட் துரையவர்களியற்றிய ராஜஸ்தான சரித்திரமும் அவ்வண்ணமே கூறுகின்றது.

பதினெண் புராணங்களுள் ஒன்ருகிய ஆக்நேய புராணத்தில் சௌமிய கண்டம், சௌரகண்டம், ஆக்நேய கண்டமென இந்துதேசம் மூன்று பாகமென்றும் அவற்றுள் வடபெண்ணை நதிக்குத் தெற்கிலுள்ள ஆக்நேயகண்டத்தை அரசு புரிபவர்கள் ஆக்நேயாள் அதாவது வன்னியரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

பாரதம் சந்திரனது உற்பத்தியைச் சொல்லுமிடத்து "சித்திரக்கனன் முகத்திலும் பிறந்தொளி சிறந்தோன்" எனச்சந்திரனுக்கு அக்கினியை மூலமாகச்சொல்லிற்று.

மேலும் சூரிய சந்திரர்கள் அக்கினியினிடமாகவே தங்கள் பிரகாசத்தைப் பெறுவதாலும், சூரியனது ஆயிரம் நாமங்களில் அக்கினியென்னும் நாமமிருப்பதாலும், உஷ்ணகிரணத்தில் சூரியனுக்கும் அக்கினிக்கும் பேதமின்மையாலும், அக்னியின் புத்திரராகிய ஆங்கீரச மஹா முனிவரே க்ஷத்ரியர் யாவருக்கும் மூலபுருஷரென்பது புராண சம்மதமாகையாலும் மேற்சொல்லிய ஐந்து வகுப்பினரும் வன்னியர்களேயாம்.

வினா:—வன்னியர் என்னும் பதம் சிறப்பாய் அக்கினி குலச் சேரராஜாக்களைக் காட்டுவதற்கு வசனமுண்டோ?

விடை:—உண்டு. பாரதம், ஆதிபர்வம், துரோபதைமாலையிட்ட சர்க்கத்தில்—

"இவன்சேந்தழலோன்மரபாகி ஈரேழுலகும்புகழ்சேரன்"

இராஜசூயயாகச் சருக்கத்தில்—

"சூரன்குலத்தோர்குபேரன்குலத்தோர் சுடர்பாவகப்போன்குலத்தோர்"

"பரிதியுமதியும் வன்னியுமுதலாம் பல்வகைக்குலம்"

முதலியவைகளாம்.

வினு:—சோழ பாண்டிய ராஜாக்களை வன்னியர் என்று சொல்ல வசனம் காட்டுக?

விடை:—கருணுகரத்தொண்ட வன்னியனர் சதகம்—

"மறைக்குவாலோதும்கருணுகரத்தொண்ட வன்னியனே",

எனச் சோழவேந்தனுக்கு வன்னியனெனும் பட்டமும்,

கடிகைமுத்துப்புலவரியற்றிய திக்குவிஜயம்—

"வேந்தன்வரகுணராமபாண்டியவன்னியனுக்கே
விஜயஞ்சொன்னேன்"

எனப் பாண்டியவேந்தனுக்கு வன்னியனென்னும் பட்டமும் வந்ததை உணர்க.

வினு:—வன்னியர் என்னும் பதத்திற்கு அரசர் என்று அர்த்தம் தொனிக்க வசனம் காட்டுக?

விடை:—கல்லாடம்—

நாற்படைவன்னியர் ஆக்கியபெருமான்,

வாசிட்டம், அயிந்தவர் கதை—

"சிந்தைசெய்வார் நல்குரவு தீர உயர் வன்னியராவோம்",

கம்பராமாயணம், உத்தரகாண்டம், இலங்கையழித்த படலம்—

"படிமன்னிவாழும் பல வன்னியர் மண்டலீகர்"

என்பன போதிய வசனங்களாம்.

வினு:—முன் உதகரித்த வசனங்களினுல் சேர, சோழ, பாண்டியர் வன்னியரென விளங்கினுலும், பல்லவர் அக்நிகுலத்தவர் என்பதற்கு ஆதாரமில்லையே?

விடை:—வேண்டிய ஆதாரமுண்டு. அக்நியின் புத்திரராகிய ஆங்கீரச முனிவரது பரம்பரையிற் பிறந்த துரோணபுத்திரராகிய அஸ்வத்தாமாவின் புத்திரன் பல்லவன்; அவனுல் பல்லவ வமிசம் உலகிலுண்டாயிற்று. தற்போது சிதம்பரம் பித்தபுரம் ஜமீன்தாரராகும் இராஜ வன்னிய ராஜஸ்ரீ சாமிதுரை சூரப்ப சோழனுர் அவ்வமிசத்தினர் அன்றோ?

வினு:—பிரமசாரியாகிய அஸ்வத்தாமனுக்குப் பல்லவன் என்னும் குழந்தை எவ்வாறு பிறந்தது?

விடை:—அஸ்வத்தாமாவின் அழகிய தபோவனத்திற்கு "மதனி" யென்றும் ஓர் அழகிய தேவகன்னிகை ஓர்காலத்தில் வர நேர்ந்து மன்மதாகாரனுகிய மகரிஷி புத்திரனைக் காமுற்று அணைந்து பிறந்த புத்திரன் பல்லவன்.

வினு:—மேற்சொன்ன விஷயத்திற்கு ஆதாரமென்ன?

விடை:—பாரதம், அநுசாசனபர்வம் 85-வது அத்தியாயமும், E. ஹல்ஸ் துரையவர்களால் வெளியிடப்பட்ட சாஸன புத்தகம், 1-வது வால்யும் 12-வது பக்கமுள்ள 24-நெ. சாஸனமும், 26-வது பக்கத்திலுள்ள 32-வது சாஸனமும்.

வினா :—"பல்லவன்" என்னும் நாமத்திற்குக் காரணமென்னை ?

விடை :—விருக்ஷத்தின் இளந்தளிர்களின்மீது அத்தேவமாது இந்தச்சிசுவை வைத்துச்சென்றதால் மேற்படி பெயர்வந்தது. பல்லவம்=தளிர்.

வினா :—சூரப்பசோழனுர் தமக்குள்ள பட்டப்பெயரினுல் சோழவமிசத்தார் என்றுவிளங்க பல்லவரென்றது எப்படி ?

விடை :—சோழர்களும் பல்லவர்களும் விவாகசம்பந்தமாய் மிகவும் கலந்து பிறகு "பல்லவச்சோழர்" எனவும் "சம்புகுலப்பல்லவர்" எனவும் வழங்கப்படலாயினர்.

வினா :—சம்புகுலத்தார் யார் ?

விடை :—சோழவேந்தர்கள்.

வினா :—பல்லவ அரசர்கள் க்ஷத்ரியர் அல்லர் என சில நூலாசிரியர் எழுதியிருப்பதேன் ?

விடை :—விசாரணையின்மையே காரணமாம். பல்லவ அரசர்களுக்குப் பரம்பரையாய் வந்த "வர்மா" என்னும் பட்டப்பெயரே அவர்கள் க்ஷத்ரியர்கள் என்பதற்கு சாக்ஷியாகும். சாஸனங்களில் "க்ஷத்ரிய சிம்ம பல்லவேஸ்வரம்" முதலிய அநேக பதங்கள் இருப்பதும் அதற்கு வேண்டிய ஆதாரமாகும்.

மற்றும் அவர்கள் மேல் வித்வான்களால் பாடப்பட்ட காவியங்களும், நாயன்மார் ஆழ்வார்கள் அவர்களை அரசராகப் பாடியிருப்பதும், அவர்கள் தற்போது சோழ வேந்தருடன் கலந்து பல்லவச்சோழர் என அழைக்கப்படுவதும் அவர்கள் க்ஷத்திரியர் என்பதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணமாகும்

வினா:—சளுக்கியர்களை வன்னியரெனல் எப்படி?

விடை:—அவர்கள் யாகத்தில் அக்கினியினிடமாய் அக்கினியம்ஸமாய் உற்பவித்து "வேள்புலவரசர்" என்னும் நாமம் பெற்றவர்களாவார்கள்.

வினா:—என்னத்திற்காக யாகாக்கினியில் உதித்தனர்?

விடை:—உலகில் தர்மம் குறைந்து பாவிகள் அதிகமாகி அடக்கியாளும் க்ஷத்ரிய வேந்தர்கள் இல்லாத போது முனிவர்களின் பிரயத்தனத்தால் அக்கினியில் பிறந்தனர்.

வினா:—எத்தனைபேர் பிறந்தனர்?

விடை:—பிரமாரா, சளூகன், புரியாரா, கோஹான் என்னும் நான்கு வீரர்கள் இந்திரன், பிரமன், ருத்திரன், விஷ்ணு என்னும் இவர்களின் அம்சமாய் உதித்தனர். அவர்களில் "சளூகன்" வம்சத்தினர்களே சளுக்கியர். இம்மரபில் விக்கிரமாதித்தன், பிரதாப ருத்திரன் முதலிய அநேக வீரர்கள் பிறந்து உலகைப் பரிபாலித்தார்கள்.

இந்த அக்நிபுத்திரர் வமிசங்கள் வடக்கே ஹிந்துஸ்தான் முழுவதும் பரவியிருக்கின்றன. ராஜபுத்திரர் ஸ்தானமாகிய ராஜபுதனத்தில் பாரம்பரியமாய் வசிப்பவர்களும் இவர்களேயாம்.

வினா:—சேர, சோழ, பாண்டிய, பல்லவ, சளுக்கிய வமிசங்களில் உதித்த வேந்தர்களெல்லாம் வன்னியர்களென்பதற்காக சுருதிப் பிரமாணம் கேட்கப்பட்டது. இனி யுக்திப் பிரமாணத்தின்படி அவர்களுக்கு ஏற்பட்டு தற்போது வழங்கிவரும் பட்டப் பெயர்கள் எவை?

விடை:—சேரனர், சோழனர், பாண்டியனர், வர்மா, உடையார், நாயனர், கண்டர், சாமந்தர், பல்லவர், அஞ்சாதசிங்கம், கங்கணவுடையார், மழவர், பொறையர், அரசுபள்ளி, இராயர், படையாட்சியார், நாயகர், வாளண்டையார், வீரமிண்டர், வல்லமையுடையார், இராஜாளி, தந்திரியார், ரெட்டிகள், துரைகள், பண்டாரத்தார், பூபதி, பரமேசுவரனர், காளிங்கராயர், சம்புராயர் முதலியவைகளாம்.

வினா:—மேற்படி பதங்கட்குப் பொருள் சொல்லுக?

விடை:—வர்மா=சூரமுடையவன்; இப்பதம் க்ஷத்ரியர்கள் சூரர்கள் என்பதைக் குறிக்க அவர்களின் பெயர்களுக்குப் பின்னால் சேர்க்கப்பட வேண்டுமென்பது ஸ்மிருதி புராணங்களின் விதி.

இப்படியே பிராமணர்களுக்குச் "சர்மா" என்றும், வைசியர்கட்குக் "குப்தன்" என்றும், சூத்திரர்கட்குத் "தாசன்" என்றும் விதிக்கப்பட்டிருக்கிறது.

உடையார்=பூமிக்குடையவர்.

நாயனூர், நாயகர்=உலகிற்கு இறைவர்.

கண்டர்=சத்துருக்களைக் கொல்லுவோர்.
(சோழர்களின் பெயர்களில் ஒன்று.)

சாமந்தர்=சேனாபதிகள்.

பல்லவர்=பாரத்வாஜ கோத்திரமுடைய பல்லவ அரசர்களிட சந்ததியார்.

பொறையர்=சேர ராஜாக்களின் பட்டப் பெயர்.

பள்ளி=இப்பதம் மலையாள பாஷையில் அரசன் என்னும்பொருள் கொண்டது. "பாலா" என்னும் சமஸ்கிருத தாதுமூலமாய்ப் பிறந்தது. உலகைக் காப்பாற்றுவோர் என்னும் பொருள் உள்ளது. மலையாளத்தில் வழங்கும், பள்ளிவாசல், பள்ளிவீடு, பள்ளிவேட்டை, பள்ளிவாள் முதலிய பிரயோகங்களே இதற்கு அத்தாட்சியாகும்.

இராயர்=ராஜர்கள்.

படையாட்சி=சைன்யங்களின் சொந்தக்காரன்.

வாளண்டையார்=அருகில் எப்போதும் வாளாயுதமுடையவர்.

தந்திரியார்=மந்திரித்தொழில் வல்லவர்.

பூபதி=உலகிற்கு இறையவர்.

பண்டாரத்தார்=நிதிக்கு உடையவர்.

துரை=கனவான்.

சம்புராயர்=சோழவேந்தர் (செம்பியன் குலத்தார்).

பரமேசுவரனார்=உலகை ஆள்பவரில் மேலானவர்.

வீரமிண்டர்=வீரமும் வல்லமையு முடையவர்.

மேற்காட்டிய ஒவ்வொரு பட்டப்பெயரும் அரசர்க் குரியவை. அப்பெயர்களிற் சிலதை மற்ற ஜாதியார் சிலர் தற்போது உபயோகித்தாலும் அப்பெயர்க்கு அவர் கள் உரியவர்கள் அல்ல.

வினா:—எப்பெயரை யார் உபயோகிக்கின்றனர்?

விடை:—நாயனார் என்னும் பெயரை பஞ்சமருள் ஓர் பிரிவாகிய வள்ளுவர்களும், படையாட்சி யென்னும் பெயரை நெய்தல்நிலமாக்களாகிய செம்படவர்க ளில் சிலரும் உபயோகிக்கத் தலைப்பட்டிருக்கிறா ர்கள்.

வினா:—மேற்சொல்லிய பட்டப்பெயர்கள் யாவும் வன் னியர்க்குள் வழங்கக் காண்கிலோமே?

விடை:—அடியிற்கண்ட விடங்களில் அவைகள் வழங் கக் காணலாம்—

சென்னை, காஞ்சி ...	...	நாயகர்.
சேலம், கோயம்புத்தூர்	...	கண்டர், படையாட்சியர்.
பருவூர் ...	... ...	காசிராயர்.

கீழூர்	நாயனார்.
ஊற்றங்கால் சமஸ்தானம்...	பரமேஸ்வர வன்னியனார்.
அறந்தாங்கி	வணங்காமுடியார்.
கும்பகோணம்	காவலர், தொண்டைமன்[னர்.
மாயூரம்	அஞ்சாதசிங்கம்.
சாமிமலை	வீரமிண்டர்.
வைத்தீஸ்வரன் கோவில் ...	ராயராவுத்த மிண்டர்.
தேனூர்	அண்ணலங்கார்.
திருமங்கலக்குடி	வாளண்டையார்.
செஞ்சி துருகம்	முதன்மையார்.
கொழுவாரிமாத்தூர் ...	தந்திரியார்.
மானியப்பட்டு	சமர்த்தியர்.
திருவாங்கூர்	வர்மா.

வினா:—இனி, வன்னியர்கள்மீது வித்வான்கள்பாடிய பிரபந்தங்கள் எவை?

விடை:—மகாகவி கம்பர் ...	சிலையெழுபது.
இருவாட்சிப்புலவர் ...	திருக்கைவளம்.
கடிகை முத்துப்புலவர்...	திக்குவிஜயம்.
ஒட்டியார்	சிவகிரிக்காதல்.
ஜயங்கொண்டார் ...	கலிங்கத்துப்பரணி.
கம்பர்	கருணாகரத்தொண்ட [வன்னியனார் சதகம்.
இரட்டைப்புலவர் ...	கட்டியக்கொத்து.

இவைகளைத்தவிர, காந்தவராயன் கலம்பகம், சேந்தவராயன் போர்க்கெழுவஞ்சி, அஞ்சாதசிங்கமாலை, இருவிருத்தப்பா, மழுவராயர் கலித்துறையந்தாதி, கீர்த்திவள மஞ்சரி, ராயராவுத்தமிண்டனுலா, விட்டலராயன் அரியசந்தமாலை முதலிய நூற்களும் சேர, சோழ, பாண்டிய ராஜாக்கள்மீது ஏற்பட்ட பிரபந்தங்களுமாம்.

வித்வான்கள் பிராமணரைப் பாடும்போது "மறையெழுபது" என அவர்களது உரிமையாகிய வேதங்களைச் சிறப்பித்து எழுபது செய்யுட்களும், அரசரைப் பாடும்பொழுது அவர்களது வில்லைச்சிறப்பித்து "சிலையெழுபது" என எழுபது செய்யுட்களும், வைசியரது தராசுக்கோலைச் சிறப்பித்து "துலாவெழுபது" என எழுபது செய்யுட்களும், வேளாளரது ஏரைச்சிறப்பித்து "ஏரெழுபது" என எழுபது செய்யுட்களும் பாடுவது வழக்கம். அவ்வண்ணமே மகாகவியாகிய கம்பர் வன்னியர்மீது சிலையெழுபது பாடியது உசிதமேயாகும்.

வினு:—வேளாளர்மீது கம்பர் ஏரெழுபது பாடியது வாஸ்தவமா ?

விடை:—அவரவர்கள் ஜாதிக்குத் தக்கபடி ஒரே வித்வான் பலஜாதியார் மீதும் பாடலாம். ஜாதிவரம்பை மீறி தாழ்ந்த ஜாதியை உயர்த்தியும், உயர்ந்தஜாதியைத் தாழ்த்தியும் எந்த நடுநிலையுள்ள வித்வானும் பாடமாட்டான்.

வினு:—தற்காலத்தில் அநேக ஜாதியார்கள் வித்வான்கள் பாடியதாக ஜாதிபுராணங்கள் ஒப்புவிக்கிறார்களே, அவைகளும் உண்மைதானே?

விடை:—ஒருக்காலும் உண்மையாகாது. பிரமாண விரோதமாய் வயிற்றுப்பிழைப்புக்காக அற்பப் புலவர்கள் பாடியவையாகும். எந்தப் புராணமாயினும் பிரமாணத்தைத் தழுவாதது ஒப்பத்தகுந்ததன்று.

வினு:—பிரமாணமென்பது யாது?

விடை:—வேதங்கள் நான்கு, வேத அங்கங்கள் ஆறு, நியாயசாஸ்திரம், மீமாஞ்சா சாஸ்திரம், ஸ்மிருதி, புராணங்கள் இந்தப் பதினான்குமே இந்து மதஸ்தர் அனைவர்க்கும்ஒப்பமுடிந்த பொதுப்பிரமாணங்கள்.

வினு:—பிரமாணமில்லாமல் "ஸ்வகபோல கற்பிதம்" அதாவது தாங்களே கற்பித்துக்கொண்ட அவ்வித புராணங்களால் அவர்கட்கு யாதுபயன்?

விடை:—அவர் போட்டுக்கொண்டிருக்கும் உயர்ஜாதி வேஷத்திற்கு அவர்கட்குள் ஏற்பட்ட ஜாதிகட்டுப்பாடுகளும் மேற்படி புராணங்களும் சகாயமாம்.

வினு:—அதனால் அவர்கட்கு ஜாதி உயர்வு ஏற்படாதா?

விடை:—அவர்களை உயர்வகுப்பினரென்று கற்றவர்கள் எப்போதும் அங்கீகரிப்பதேயில்லை.

வினு :—ஜாதிப்பிரிவினையால் தற்போது யாதொரு நன்மையையும் காணவில்லையே? அதனுலென்னபயன்?

விடை :—ஆதியில் ஜாதிப்பிரிவினை ஏற்பட்டது மிகவும் ஆழ்ந்தகருத்தை முன்னிட்டே. ஆனல் தற்போது ஒவ்வொரு ஜாதியாரும் தங்களுடைய ஜாதிகருமங்களை விடாமற் செய்தல் என்னும் முக்கிய பாகத்தை அடியோடு மறந்து, பயனின்றிய ஜாதி யபிமானத்தை மட்டும் விடாமலிருக்கின்றனர். ஆனபடியால் தான் நன்மை காணவில்லை.

வினு :—ஜாதி தர்மங்களை விட்டதனுலேயே ஜாதி வித்தியாசமும் வேண்டாமே?

விடை :—அப்படியன்று; எப்படியாவது நாளடைவில் சதாசாரம் அதாவது நமது மஹரிஷிகள் அநுஷ்டித்து வந்த ஒழுங்கைக் கைப்பற்ற முயலவேண்டுமேயல்லாமல் அடியோடு கீழே விழக்கூடாது. ஆதலின் இனியாவது அவரவர்கள் தங்கள் சுயஜாதி தர்மங்களை வழக்கத்திற்குக் கொண்டுவர முயல்வதே கடன்.

வினு :—சுஜாதி கர்மங்களால் மட்டும் என்னபயன்?

விடை :—கர்மத்தால் சித்தசுத்தியும் அதனுல் ஞானமும் அதனுல் மோட்ச லாபமும் என்பது நமது வேதங்களின் சித்தாந்தமாம்.

வினு :—இதற்குப் பிரமாணம் ஒன்று சொல்லுக?

விடை :—"கர்மணைவஹி ஸம்சித்தி மாஸ்திதா ஜநகா தய:=கர்மத்தாலேயே ஜனகர் முதலியோர் மோக்ஷமடைந்தனர்" என்பது கீதாவசனம்.

வினு :—சரி, தற்போது உயரக்கருதும் ஜாதியார் யார்?

விடை :—கம்மாளர், சௌராஷ்டிரர், சேடர், பரதவர், சான்றூர், இடையர், வேளாளர், செக்கார் முதலியவர்களாம்.

வினு :—இவர்களில் க்ஷத்ரிய அபிமான முடையோர் யாவர்?

விடை :—பரதவர், சான்றூர், இடையர் முதலியோராம்.

வினு :—பரதவர் தங்களை க்ஷத்ரியரென்பதில் ஆக்ஷேபனை யென்ன?

விடை :—அவர்கள் நமது புராணம், இதிகாசம், ஸ்மிருதி, திவாகரம், நிகண்டு முதலிய சுருதிகளின்படி நெய்தல் நிலமாக்கள் எனவும், படகு ஓட்டியும் மீன்பிடித்தும் இழிதொழிலால் ஜீவிப்போரெனவும், ஜாதிப் பிரிவினையில் அந்தராள சங்கரஜாதியில் சம்பந்தப் பட்டவர்கள் எனவும் ஏற்படுகிறபடியால் இவர்களை க்ஷத்ரியரெனல் அணுவும் மலையும் சமம்போலாம்.

வினு:—இவர்கள் என்ன ஆதாரத்தால் தங்களை க்ஷத்ரியர் என்கின்றனர்?

விடை:—இவர்களில் சிலர் தாங்கள் பர்வதராஜ வமிசமென்றும் சூரியகுல க்ஷத்ரியரெனவும், சிலர் பரதகுல பாண்டியரெனவும், சந்திரவமிசமெனவும் சொல்லுகின்றனர். இக்கொள்கை மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடியிட்டதுபோலாம்.

வினு:—மேற்படி கொள்கைகளில் என்னபிசகு?

விடை:—முந்தியவர்களாகிய பர்வத வமிசத்தார், பாற்கடல் கடையும்போது பிறந்த லக்ஷ்மீ தேவிக்கும் மஹாவிஷ்ணுவுக்கும் மருகு என்னும் புத்திரன் பிறந்து அவன்வயிற்றில் பர்வதன் என்னும் புத்திரன் உற்பத்தியாகி அவன் தேவர்களாலும் அசுரர்களாலும் கடையமுடியாத பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்ததாகவும் அவன் வமிசத்தார் தாங்கள் எனவும், அதனால் சூரியகுலம் தாங்கள் எனவும், அஸ்திவாரமின்றிய ஓர் பொய்ப்புராணம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பிந்தியவர்களோ, தங்களுக்குப் பரதர் என்னும் பேரிருப்பதாலேயே தாங்கள் சந்திரவமிச பரதமஹாராஜன் சந்ததியெனவும், பரிமளகந்தியைச் சந்தனு வேந்தனுக்குக் கொடுத்ததனால் அரச சம்பந்தமுள்ளவர்களென்றும் சொல்லுகின்றனர்.

வினு :—பரதர் என்னும் சொல்லுக்கு அர்த்தமென்ன ?

விடை:—பரவர், பரதர் என்பது கடல் சம்பந்திகள் என்பதாம். பரவர், பரதர், கடலர், நுளையர், கழியர், சலவர், வலேயர் என்பன அவர்கள் நாமங்கள்.

வினு :—சான்ருர்கள் தங்களை க்ஷத்ரியர் என்பதற்கு ஆதாரமென்ன ?

விடை :—தாங்கள் வழங்கிவரும் நாடார் என்ற பட்டப் பெயரும் சான்ருர் என்ற ஜாதிப் பெயருமே ஆதாரமெனச் சொல்லுகின்றனர். தற்போது "சான்ருர் குல க்ஷத்திரியர்" என்ன எந்தநூல் வழக்குகளிலும் இல்லாத ஓர் குலத்தை க்ஷத்ரிய ஜாதியின் உட்பிரிவாகக் கற்பித்திருக்கின்றனர்.

வினு :—நாடான், சான்ருன் என்னும் பதங்கட்குப் பொருள் யாது ?

விடை :—நாடார்=நெருங்காதவர்; சான்ருர்=கள்விற்போர் (சான்று அல்லது சாறு=கள்). சவுண்டியர், துவசர், படுவர், பழையர், பிழியர் என்பனவும் இவர்களது ஜாதிப் பெயர்களாம்.

வினு :—இடையர் என்ன ஆதாரம் சொல்லுகின்றனர் ?

விடை :—கிருஷ்ணபகவான் தங்கள் புத்திரரெனவும் அதனுல் தாங்கள் யாதவ வமிச க்ஷத்ரியரெனவும் சொல்லுகின்றனர்.

வி௵ :—ஏன் சொல்லக்கூடாது ?

விடை :—நந்தகோபனுகிய முல்லைநிலத்தலைவன் கிருஷ்ணபகவானை வளர்க்கப் பாக்கியம் பெற்றுனேயொழியப் பெறப் பாக்கியமடையவில்லை. யாதவ வேந்தாகிய வசுதேவரே அவ்வித பாக்கியமடைந்தவர். ஆகையால் யாதவர் வேறு, இடையர் வேறு. யாதவர் என்போர் சந்திரவமிச யயாதி வேந்தன் கான்முளையாகிய யதுராஜாவின் மரபில் வந்த வேந்தர்களாம். இடையர், அண்டர் பொதுவர், கோபாலர், குடவர், அமுதர், கோவலர், ஆயர், தொறுவர், விந்தர் என்பன முல்லைநில மாக்களின் பெயராம்.

வி௵ :—கவரைகள் என்று வழங்கும் வடுகர்கள் தங்களை க்ஷத்ரியரெனப் புராணம் ஏற்படுத்தியிருக்கிறுர்களே? அவர்கள் க்ஷத்ரியர்கள் என்பது சம்மதந்தானே ?

விடை :—சைவ புராணத்தில் ஏற்பட்ட ஜாதி வேற்றுமைப்படி அவர்கள் வளையல், முத்து முதலிய விற்போர் என்பதனுல் வைசிய அநுலோமர் என்று நம்பவேண்டியிருக்கிறது. தற்போது கவரைகளில் பெரும்பாலார் சங்கு, வளையல், இரத்தினம் முதலியவைகள் விற்பதாலும், தேசாயி செட்டிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்வதாலும், பாரம்பரையாய் வியாபாரத்துக்குரியவர்களென்றேற்படுகிறது.

சமஸ்கிருத நிகண்டாகிய அமரத்தில் அவர்களை வைசியராகச் சொல்லியிருந்தாலும் லட்சுமண கவீஸ்வரரால் செய்யப்பட்ட ஆந்திர நிகண்டில் அவர்களைச் சூத்திரராகச் சொல்லப்பட்ட காரணந்தெரியவில்லை. எப்படியானாலும் அவர்களது பரம்பரைத்தொழிலை முன்னிட்டு வைசியவகுப்பில் உட்பட்டவரேயன்றி க்ஷத்ரியராகார்.

வினா:—விஜயநகரத்தாசரது பந்துக்களாக அவர்களது புராணத்தில் எழுதப்பட்டிருக்கிறதே?

விடை:—விஜயநகரத்தரசர்கள் வன்னியரென்றே வில்லவநல்லூர், வைத்தீச்சுரன் கோயில் முதலியவிடங்களிலுள்ள சாசனங்கள் சாக்ஷி பகர்வதால் இவர்களிற் சிலர் அவ்வரசர்களின் நம்பிக்கையுள்ள உத்தியோகஸ்தர்களாய் இருந்திருக்கலாம், அதனாலேயே தாங்கள் க்ஷத்ரியரென்ன அபிமானங்கொண்டு புராணமெழுதியிருக்கலாம்.

வினா:—கவரைகள்மீது வித்வான்களால் பாடப்பட்ட பிரபந்தங்கள் உண்டா?

விடை:—காணோம்.

வினா:—அவர்களை க்ஷத்திரியர்களென்று ஸ்தாபிக்க சிலா தாம்பிர சாஸனங்களாவது உண்டா?

விடை:—அதுவுமில்லை.

வினு :—தற்போதாவது முற்போதாவது இவரது வகுப்பில் துவிஜர் என்னும் குறிப்பைக்காட்டும் உபநயனச்சடங்கு நடத்தும் வழக்கமுண்டா ?

விடை :—எப்போதுமேயில்லை.

வினு :—இப்படியெல்லாம் ஜாதிப்புரட்டுகள் ஏற்படக் காரணமென்ன ?

விடை :—பலகாரணமுண்டு; அவற்றுள்—

(1) இந்துக்களின் வர்ண ஆச்சிரமங்களும் அவற்றின் தர்மங்களும் வழுவாமலும், ஒன்றோடொன்று கலவாமலும் வேலிபோற் பாதுகாக்கும் க்ஷத்ரிய அரசர்கள் இல்லாமை.

(2) தற்போதுள்ள கவர்ன்மெண்டார் ஹிந்துமத விஷயங்களில் நுழையாமை.

(3) தற்காலம் க்ஷத்ரிய வைசியர் கிடையாதென்று ஆங்கிலேய சரித்திரக்காரர்கள் பொறுமையுள்ள சிலர் போதனையால் விசாரமின்றி சரித்திரமெழுதியது.

(4) அதையே வேதப்பிரமாணமாக நம்மவரில் கற்றவர்கள் அநேகர் நம்பியது.

(5) சென்ஸஸ் என்னும் ஜன சங்கியை யெடுக்க ஆரம்பித்தோர் சாஸ்திர வழிக்கு மாறாக இந்துக்களின் ஜாதிக்கிரமங்களை மேலது கீழதாகவும் கீழது மேலதாகவும் பதிவு செய்தமை.

கடைசியிற்காட்டிய இக்காரணத்தால் உயர்குலத்தார் அநேகர் தங்கள்ஜாதிப் பெருமைகளைக் குறிப்பித்து தங்கள் ஆதிக்யத்தைக் காட்டத் தலைப்படவே கீழ்க்குலத்தார்களும் தாங்களும் உயர்ந்தோர்களென்று வேஷம்போட ஆரம்பித்தார்கள். சுருதி, யுக்தி, அநுபவமூலமாய் அவர்களை விசாரிப்போர் இன்மையால் போட்டுக்கொண்ட வேஷத்தை நிலையாக்க முயல்கின்றனர்.

ஓர் ஜாதிக்கு வார்சு இல்லையென்று சிலர் கற்பித்துவிட்டதை நம்பி சிலபேதைகள் தாங்கள் கீழ்ச்சாதியிலிருந்து படும் உபத்திரவத்தை நீக்கிக்கொள்ள சமயம் பார்த்திருந்து வார்சில்லாத ஜாதிக்கு நாங்களே வார்சென்று கிளம்பினர். உதாரணமாக—

பரதர், சான்றார், மறவர் தங்களைப் பாண்டிய வமிசமென்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். மிஸ்டர் நெல்ஸன் தமது மானுயலில் பாண்டிய வமிசத்தார் சிவகிரியில் உள்ளார் என ஸ்தாபித்திருப்பதையும், சிவகிரிக்காதல், திக்குவிஜயம் முதலிய பிரபந்தங்கள் சிவகிரி வன்னிய ராயர்கள்மீது ஏற்பட்டிருப்பதையும் இவர்கள் அறிந்திலர் போலும்.

வினா:—தற்போது இவர்கள் அடைந்திருக்கும் கல்வி முதலிய நாகரீகங்களை முன்னிட்டு ஜாதியை உயர்த்திக் கொண்டால்தான் என்ன ?

விடை:—தொழிலாலும், குணத்தாலும் ஆதியில் ஜாதிகள் பிரிக்கப்பட்டு சிருஷ்டிக்கப்பட்டன. மாடு மேய்த்தல், மீன்பிடித்தல், கள்ளிறக்குதல், வளையல் விற்றல் முதலிய தொழில்கள் க்ஷத்ரிய தருமமாயிருந்தால் இவர்களின் உயர்வை அங்கீகரிக்கலாம்.

வினா:—ஆதியில் தொழில், குணங்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டன?

விடை:—சத்துவகுணமும் தேவபூஜை முதலிய தொழில்களுமுடையவர் பிராமணராகவும், சத்துவங் கலந்த ரஜோகுணமும் யுத்தமுதலிய தொழில்களுமுடையவர் க்ஷத்திரியராகவும், தமஸ்கலந்த ரஜோகுணமும் வியாபாரமுதலிய தொழில்களுமுடையவர் வைசியராகவும், தமோகுணமும் ஊழியமுதலிய தொழில்களுமுடையவர் சூத்திரராகவும் பிரிக்கப்பட்டனர்.

வினா:—தமது சிருஷ்டியில் ஏற்பட்ட சகல கண்டங்களிலுமில்லாத இந்த ஜாதிபேதத்தைக் கடவுள் பரதகண்டத்தில் மாத்திரம் ஏற்படுத்த காரணமென்ன?

விடை:—மற்ற தேசங்களில் உள்ளவர்கள் கேவலம் மிருகப்ராயமாயிருக்க இப்பரதகண்டம் மட்டும் எப்போதும் உத்தம மனுஷ்யர்கள் வசிக்கும் நாகரீகமுடையதாய் இதிலுள்ளோர் மோட்சயோக்கியர்களாயிருந்துவந்ததால்.

வினா:—சிலநாட்களுக்கு முன்னேதான் இந்தியாவில் ஆரியர்கள் குடிபுகுந்தாரென்ன சில சரித்திரக்காரர்கள் எழுதியிருப்பதேன்?

விடை:—அது சுத்த பிசகு. இந்தியாவில் ஆரியர்கள் நினைக்கவும் எண்ணவும் முடியாத அநேக யுகங்களாய் வாழ்ந்து வருகிறார்களென்பதே சாஸ்திரப் பிரமாணம். இவ்விஷயத்தை நாம் நமது மங்கள, அமங்கள காலங்களில் உச்சரிக்கும் சங்கற்பத்தால் அறிந்துகொள்ளலாம்.

வினா:—அச்சங்கற்பத்தில் காலகணிதமுள்ள சொற்கள் யாவை?

விடை:—"ஆத்யப்ரம்ஹண:, த்விதீய பரார்த்தே, ப்ரதம பாதே, வைவஸ்வதமந்வந்தரே, வர்ஷே" முதலிய சொற்கள் தற்போதுள்ள பிரமாவுக்கு ஐம்பது வருஷம் பூர்த்தியாகி ஐம்பத்தோராவது வருஷத்தில் முதல்நாளில் நான்காம்பாகமாகிய வைவஸ்வத மந்வந்தரம் நடப்பதாகக் காட்டுகின்றன.

வினா:—இதைக் கொஞ்சம் விவரமாக்கவேண்டும்?

விடை:—

இந்துக்களின் மதப்படி பிரமாக்கள் அநேகர். முந்தி அநேக பிரமர்கள் நூறு நூறுவருஷங்கள் கழிந்து மாண்டனர். தற்போதுள்ள பிரமாவுக்கு ஐம்பது வரு

ஷம் முடிந்தபடியால் இனி ஐம்பது வருஷங்கள் கழிந்த பின் இவர் பட்டத்திற்குத் தற்போது காத்திருக்கும் ஹநுமார் வருவார். ஒரு பிரமாவின் ஆயுள்கணக்கு வருமாறு:—கிரேதை, திரேதை, துவாபரம், கலியென்னும் நான்கு யுகங்களும் கூடியது ஒரு சதுர்யுகம், சதுர்யுகம் ஆயிரங்கொண்டது பிரமாவுக்கு ஒருபகல்; இரண்டாயிரங் கொண்டது ஓர்நாள்; இந்தநாள் முந்நூற்றறுபது ஒருவருஷம்; இவ்வருஷம் நூறு ஒரு பிரமாவின் ஆயுள். பிரமாவின் ஓர்பகலில் பதினான்கு மனுக்கள் ஈஸ்வராம்சமாய் ஸ்மிருதிகளையும் சந்ததிகளையும் உண்டாக்கி உலகை யாள்வார்கள். அவர்களில் ஸ்வாயம்புமனு, ஸ்வாரோசிஷமனு, உத்தமமனு, தாமசமனு, ரைவதமனு, சாக்ஷுஷமனு என்னும் ஆறுமனுக்களின் காலம் முடிந்து தற்போது ஏழாவதாகிய வைவஸ்வத மந்வந்தரம் நடக்கிறது. இவர்க்குப்பின் சாவர்ணிமனு, தக்ஷசாவர்ணிமனு, பிரமசாவர்ணிமனு, தர்மசாவர்ணிமனு, ருத்ரசாவர்ணிமனு, ரவுச்சியமனு என்னும் எழுவர் ஆளவிருக்கின்றனர். ஒவ்வொரு மனுவின் காலம் எழுபத்திரண்டாயிரம் சதுர்யுகமாகும். ஒவ்வொரு மந்வந்தரத்திலும் ஒவ்வொரு வேதவியாசர்கள் தோன்றி வேதங்களை விரிப்பார்கள். மனுக்கள் ஸ்மிருதிகளை ஏற்படுத்துவார்கள். ஆதலால் நமது இந்துதேசம் எக்காலத்திலும் உத்தமமனிதர்களாலும் வர்ணாசிரமதர்ம முதலிய கர்மங்களாலும் வர்ண வேறுபாடுகளாலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

வினா:—சிறிது நாட்களுக்கு முன்னிருந்த வலங்கை இடங்கை சச்சரவில் வன்னியர்கள் இடங்கையில் சேர்ந்திருக்கக் காரணமென்ன?

விடை:—வன்னியரும் பிராமணரும் எப்போதும் மத்தியஸ்தர்களாகவே யிருந்தனர். ஆனால் வலங்கைக் கட்சி பிரபலமாகி இடங்கையார் பரிதாப தசையிலிருந்த காலத்தில் ஜனத்தொகையிலும் கௌரவத்திலும் உயர்ந்த வன்னியர்களை ஷை இடங்கையார் பிரார்த்திக்க அவர்கட்கு இரங்கி அவர்களிடம் ஒப்பந்த தஸ்தாவேஜு பெற்றுக்கொண்டு அவர்கள் பக்கம் சேர்ந்து வலங்கையாரின் அதிக்கிரமத்தை அடக்கி இடங்கையாரைக் காத்தனர்.

வினா:—இதற்கு ஆதாரம் உண்டோ?

விடை:—சாலிவாஹன சாப்தம் எழுநூற்று அறுபத்திரண்டுக்குமேல் சாதாரணஹூ புரட்டாசிமீ 5-உ யில் சுககலியாணச் சோழன் காலத்தில் காஞ்சீபுரம் அனவரத சௌந்தரியபட்ட முத்துகச்சேஸ்வர குருசுவாமியார் முன்னிலையில் செட்டிகள் முதலிய எட்டுச்சாதியார் எழுதிக்கொடுத்த உடன்படிக்கைப் பத்திரமே சாட்சி.

வினா:—அப்போது வலங்கையில் முக்கியஸ்தர்கள் யார்?

விடை:—வேளாளரும் கவரைகளுமே.

வினா :—இடங்கையில் முக்கியஸ்தர்கள் யார் ?

விடை :— செட்டிகள், கம்மாளர் முதலியவர்கள்.

வினா :—வலங்கை, இடங்கை என்னும் பிரயோகம் ஏற்படக் காரணமென்ன ?

விடை :—அக்காலத்தில் காஞ்சியில் அரசியற்றிய பல்லவவேந்தன் முன்பு இக்கட்சியார்கள் பிரியாதுகொண்டு சென்றபோது இடதுகைப்பக்கம் நின்றோர் இடங்கையாரெனவும், வலக்கைப்பக்கம் நின்றோர் வலங்கையாரெனவும் அழைக்கப்பட்டார்களென்பது ஐதீகம்.

வினா :—பிராம்மணர் முதலியவர்கள் தற்போது கோத்திரம், சூத்திரம், சாகை, பிரவரம் முதலியன உச்சரிக்கின்றார்களே, அவைகள் மற்ற ஜாதிகட்கும் உண்டோ ?

விடை :—ஆதி நால்வருணங்கட்கும் உண்டு.

வினா :—கோத்திரமென்றால் என்ன ?

விடை :—அவ்வவ் வகுப்பார் உற்பத்தியாவதற்குக் காரணமாயிருந்த மூலரிஷிகளின் நாமங்களாம். கோத்திரமென்பதும் சந்ததியென்பதும் ஒக்கும்.

வினா :—பிரவரமென்பது எது ?

விடை :—கோத்திர பரம்பரையில் இடையில் உண்டாகி பிரக்கியாதி யடைந்த உத்தம புருஷர்களின் நாமங்களாம்.

வினு:—சாகை யென்பது யாது?

விடை:—நான்கு வேதங்களிலும் அந்தந்த கோத்திரத்தார்கள் ஓதவேண்டிய பாகங்களாம்.

வினு:—சூத்திரமென்பதென்ன?

விடை:—ஆபஸ்தம்பர் முதலிய மஹான்களால் செய்யப்பட்டு அந்தந்த சாகையுள்ளவர்கள் செய்யவேண்டுமென்று கற்பித்த தர்மங்களாம்.

வினு:—கோத்திரம் எத்தனைவிதம்?

விடை:—கச்யபர், சங்கிருதி, ஹரிதர், அத்திரி, ஆங்கிரசர், ஜமதக்கினி, வசிஷ்டர், விஸ்வாமித்திரர் முதலிய வேதங்களிற் சொல்லப்பட்ட ரிஷிகளின் பெயரால் அநந்த விதம்.

வினு:—பிரவரம் எத்தனை?

விடை:—அதுவும் அநேகமே.

வினு:—சாகை யெத்தனை?

விடை:—ருக்வேதத்திற்கு இருபத்தொரு சாகை, சுக்லயஜுர் வேதத்திற்கு பதினைந்து, கிருஷ்ணயஜுஸுக்கு எண்பத்தாறு, சாமவேதத்திற்கு ஆயிரம், அதர்வணத்திற்கு இருபத்தொன்று.

வினா :—சூத்திரம் எத்தனை?

விடை :—ருக்வேதத்திற்கு ஆஸ்வலாயனம், கௌஷீதகம் என இரண்டு; சுக்கிலயஜுஸுக்கு காத்தியாயனமென ஒன்று, கிருஷ்ணயஜுஸுக்கு போதாயனம், ஆபஸ்தம்பம், சத்தியாஷாடம், வைகாநசம், பாரத்வாஜம், ஆக்நிவேஸ்யம் என ஆறு; சாமவேதத்திற்கு ஜைமினீயம், திராக்யாயனம் என இரண்டு; அதர்வண வேதத்திற்கு கௌசிகம் என ஒன்று.

வினா :—வன்னியர்கட்குக் குடிப்பெயர்கள் யாவை?

விடை :—சேரம், சோழம், பாண்டியம் முதலியவையாம்.

வினா :—கோத்திரங்கள் எவை?

விடை :—ஆங்கீரசம், ருத்திரவங்யம், பாரத்வாஜம், கோஹான், சாலுக்யம், பிரமாரா, புரியாரா முதலியன.

வினா :—சாகைகள் எவை?

விடை :—ருக், யஜுஸ், சாமம், அதர்வண மென்பவைகட்கு உரியவைகளாம். கிருஷ்ணயஜுர் வேதத்தின் சாகைகள் முக்கியம்.

வினா :—பிரவரம் யாவை?

விடை :—மேற்சொல்லிய குடிப்பெயர்களே பிரவரம். இவையன்றி குலசேகராழ்வார், சேரமான் பெருமாள் முதலிய புகழ்பெற்ற வீரர்கள் பெயராலும் வழங்குவதாம்.

வினு:—சூத்திரங்கள் எவை?

விடை:—மேற்சொல்லிய ஆஸ்வலாயனம், போதாயன முதலியவைகளாம்.

வினு:—வன்னியர்க்கு மதமென்ன?

விடை:—சைவம், வைஷ்ணவம், சாக்தேயம், சௌரம், காணுபத்யம், வைரவம் முதலியவைகளாம்.

வினு:—இவ்வளவு மேன்மையுற்ற வன்னியர்கள் தற்போது தாழ்ந்த நிலைமையிலிருக்கக் காரணமென்ன?

விடை:—முதற்காரணம் கலியுகதருமம். பாரதம் ஆரண்ய பருவத்தில்—

"தெண்டிரைக் கதிபராகிய மன்னர்
தேசமெங்கு முழல்வார் நிலகெட்டே"

என யுதிஷ்டிரருக்கு மார்க்கண்டேயர் கலியுகதருமம் போதித்திருப்பது தற்போது உண்மையாகவே நடக்கிறது. வன்னியர்களின் ஜனத்தொகை மற்றவர்களின் தொகையைக் காட்டிலும் அதிகமானதனுலும், காலக்கிரமத்தில் இவர்களின் அரசுநீங்கி பயிர்த்தொழில் முதலியவற்றில் பிரவேசித்திருப்பதனுலும், கல்விமுதலிய நாகரீகங்கள் இன்மையாலும் தாழ்ந்ததுபோற் காணப்படுகின்றனர் என்றுலும் ஜனத்தொகையை முன்னிட்டுப் பார்க்கின் மற்ற ஜாதியாரைவிட உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் இவர்களேயாம்.

வினு :—இவர்கட்குமட்டும் நாகரீகம் உயராத காரண மென்ன?

விடை :—முன்சொல்லிய காரணமே.

வினு :—இனியாவது உயர நம்பிக்கையுண்டா?

விடை :—உண்டு.

வினு :—எப்படி?

விடை :—சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மகாசங்கம் எனும் பெயருடன் வன்னிகுலோத்தாரணராகும் ஸ்ரீலஸ்ரீ கோபாலநாயகர் அவர்கள் முயற்சியால் உதித்து இருபத்து மூன்றுவது வயதை யடைந்திருக்கும் சங்கபுருஷன் செய்கையால் அங்கங்கு பிறந்து வளர்ந்துவரும் சங்கச்சிறுவர்கள் விருத்தியடைந்து வருகின்றனர்.

வினு :—மேற்படி சங்கங்களின் நோக்கமென்ன?

விடை :—வன்னியர்கள் கல்வி, சுஜாதியபிமானம் முதலியவற்ருல் பூர்விக அந்தஸ்தைப் பெறுவதேயாம்.

வினு :—ஈஸ்வர சங்கற்பத்தால் ஏற்பட்ட ஆளுகைக்குரிய க்ஷத்திரிய வேந்தர்கள் இக்காலம் அரசில்லாமலிருத்தல் கடவுளது சங்கற்ப விரோதமல்லவா?

விடை :—

ஜீவர்களின் சுக துக்கங்கள் அவர்களின் தர்மாதர்மங்கட்குத் தக்கபடி ஈஸ்வரனுல் அமைக்கப்படுகின்

றன. ஈஸ்வர சங்கற்பம் நமது புண்ய பாவங்களுக்குத் தக்கபடிதான் அமையும். என்றாலும் இந்தியாவில் இந்து மதத்துக்குரிய சநாதன தர்மங்கள் எப்போதும் முற்றும் இல்லாமல் ஒழிந்தது கிடையாது. கலியுகத்தில் கொஞ்ச காலம் க்ஷத்திரியர்களின் அரசு நீங்குமென்று விஷ்ணு புராணம், பவிஷ்யத் புராணங்களில் சொல்லப் பட்டிருக்கிறது.

அப்படியிருந்தும் இவர்களின் அரசாட்சி முற்றும் ஒழியவில்லை. சிற்றரசர்கள் அநேகர் ஆள்கின்றனர். நமது வைதிக வர்ணாச்சிரம தர்மங்களும் அற ஒழிவதில்லை. அப்படிப்பட்ட ஓர்காலம் சம்பவிக்கும் போது பகவான் இப்பூமியில் அவதாரஞ்செய்து அதர்மத்தை யோட்டி தர்மத்தை நிலைநாட்டி அதனைப் பாதுகாக்க அரசனை நியமிப்பாரென்பது திண்ணம். சுபம்!

வாழி.

வாழிய மாமறை வாழியர் முன்னோர்
வாழியர் முக்குலம் வாழ்தரு மன்னர்
வாழிய வன்னிய மாமர பென்றும்
வாழிய நூலிது மகிதல நன்றே.

முற்றிற்று.